## செய்தி வெளியீடு எண்: 563 31– 8–2007

### பத்திரிக்கை செய்தி

ஆண்டுதோறும் மத்திய அரசின், சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் அமைச்சகம் மூலம் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென சிறப்பாக செயல்பட்டு வரும் தொண்டு நிறுவனங்கள், தனிநபர்கள், ஊனமுற்ற பணியாளர்கள் ஆகியோருக்கு தேசிய விருதுகள் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டும், ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான தேசிய விருதுகள் கீழ்க்குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் வழங்க தகுந்த நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சிறந்த ஊனமுற்ற பணியாளர்கள் / சுயதொழில்புரியும் ஊனமுற்ற நபர்கள், ஊனமுற்றோருக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்கிய சிறந்த தனியார் தொழிலதிபர், ஊனமுற்றோருக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு பெற்றுத் தந்த பணியமர்த்தும் அலுவலர் அல்லது நிறுவனங்கள், ஊனமுற்றோருக்கு சிறப்பாக சேவை செய்து வரும் தனிநபர் / நிறுவனங்கள், ஊனமுற்றோருக்கு சிறப்பாக சேவை செய்த மாவட்டம், ஊனமுற்றோருக்கு தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்திய நிறுவனங்கள், ஊனமுற்றோர் பயன்படுத்தும் வகையிலான உதவி உபகரணங்களை சிறந்த தொழில்நுட்பத்துடன் வடிவமைத்தவர்கள், ஊனமுற்றோருக்கு முன்னோடியாகத் திகழ்பவர்கள், தேசிய அறக்கட்டளையின் (National Trust) சிறந்த உள்ளூர் அளவிலான குழுக்கள் (Local Level Committees), சிறந்த தனியான ஆக்கத்திறன் வாய்ந்த ஊனமுற்ற நபர்கள் மற்றும் குழந்தைகள் மற்றும் தேசிய ஊனமுற்றோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக திட்டத்தினை செயல்படுத்தும் மாநில அளவிலான முறைப்படுத்தும் நிறுவனங்கள் ஆகிய பிரிவுகளில் தேசிய விருதுகள் பெற விண்ணப்பிக்கலாம்.

மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் / நிறுவனங்கள் இதற்கான படிவங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட மறுவாழ்வு மையம் அல்லது ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகம், சென்னை ஆகியவற்றில் இருந்து பெற்று தக்க இணைப்புகளுடன் வருகிற 5.9.2007–க்குள் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், 15/1, மாதிரி பள்ளிச் சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை–600 006 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**